
தொகுதி ௨
சித்திரம் ௩
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
நாடு திரும்புதல்
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing










பகுதி-2 சித்திரம்-3

## தாய்நாடு திரும்புதல்

செல்லாத்தாவிடம் வளர்ந்து வந்த இரு ஆண் குழந்தைகளும், உண்மை தெரிந்து தங்களின் சொந்த பெற்றோரான பொன்னிவள நாட்டு தம்பதிகளிடம் வந்து சேர்ந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்த சந்தோசத்துடன் பொன்னிவள நாட்டிற்கு திரும்ப செல்கின்றனர். தங்களது பழைய அரண்மனையை புதுபித்து வாழ தொடங்கினர். காலங்கள் உருண்டோடியது, மூன்று குழந்தைகளும் வளர்ந்து பெரியவர்களானார்கள்.




மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ கசாண்ட்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்

© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.






குழந்தைகளே! என் தோள் மீது அமர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பெற்றோர்களிடம் அழைத்து போகிறேன்.
நான் உங்களை பெறாமை பிடித்த பங்காளிகளிடமிருந்து காப்பாற்றி, ஐந்து வருடங்கள் பத்திரமாக வைத்திருந்தேன். பங்காளிகள் உங்களைப் பார்த்தால் எந்த நேரத்திலும் ஆபத்து தான்.
இப்போது, நீங்கள் பெற்றோர்களிடம் செல்லும் காலம் வந்து விட்டது.


செல்லாத்தா இரண்டு குழந்தைகளையும் தன் தோளில் சுமந்த படி காடு மலைகளைக் கடந்து வீரப்பூர் சென்றாள்.
முடிவில், வீரப்பூரை அடைந்து இருவரையும் விநாயகர் கோவிலில் அமர வைத்தாள்.
நான் சென்று உங்கள் பெற்றோர்களை அழைத்துக் கொண்டு விரைவில் திரும்பி வருகிறேன்.
நான் திரும்பி வரும் வரை, இந்தக் கோட்டைத் தாண்டி செல்லக்கூடாது.
செல்லாத்தா, குழந்தைகளின் பெற்றோரைத் தேடிச் சென்றாள்.


வீரப்பூரின் தெருக்களில் நடந்து சென்ற செல்லாத்தா, அங்கிருந்தவர்களிடம்...
அம்மா! ஐந்து வருடங்களிற்கு முன் ஒரு கணவனும் மனைவியும் அழகான பெண் குழந்தையுடன் இங்கே வந்தார்கள்.
அவர்களை இங்கு எங்காவது பார்த்தீர்களா?
ஆம்! நாங்கள் பாத்திருக்கிறோம் தாயே!
என்னுடன் வாருங்கள் நான் கூட்டிச் செல்கிறேன்.
அந்தப் பெண்கள் செல்லாத்தாளை குதிரைக் கொட்டாரத்திற்கு அழைத்துச் சென்றனர்.


செல்லாத்தாளின் நிழல் குடிசையின் வாசலில் விழுந்தது. குன்னுடையானுக்கும், தாமரைக்கும் "அது யாருடையது என்று தெரியாதலால்" ஆச்சரியமடைந்தனர்.
தாமரை! இங்கு வந்து ஐந்து வருடங்களில், நம் வீட்டிற்கு யாரும் வந்ததில்லை. ஆனால்! இப்போது வாசலில் ஒரு நிழல் தெரிகிறது. யாரென்று போய்ப் பார்!
சாமி! அது நம் குலதெய்வம் செல்லாத்தா!




குன்னுடையான் வெளியே வந்து பார்த்து, ஆச்சரியத்தில் திகைத்துப் போய் வணங்கினார்.






ஆ.. என்ன?.. அதெப்படி சாத்தியமாகும்!
தாமரைக்கு குழந்தை பிறக்க இருந்த நேரம் தங்கவள நாட்டுப் பங்காளிகள் குப்பியிடம் ஆண் குழந்தை பிறந்தால், அதை கொன்று விடும் படி கூறினர். அதை அறிந்த விஷ்ணு, என்னை கோவிலில் இருந்து உன் வீட்டிற்கு சுரங்கம் அமைக்க சொன்னார்.
தாமரைக்கு பிரசவவலி கண்டு இரண்டு ஆண் குழந்தைகள் முதலில் பிறந்தது, நான் அவர்களை சுரங்கம் வழியாக எடுத்துச் சென்று விட்டேன்.
அவர்களை இது நாள் வரை கவனமாக வளர்த்து வந்தேன். இப்பொழுது, வீரப்பூருக்கு அழைத்து வந்து விநாயகர் கோவிலில் இருக்க வைத்துள்ளேன்.
ஆ... அப்படியா! மிக்க மகிழ்ச்சி செல்லாத்தா! தயவு செய்து எங்களை அவர்களிடம் அழைத்துச் செல்லுங்கள்.
செல்லாத்தா அவர்கள் இருவரையும் மகன்கள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றாள்.


என் கண்மணிகளே! செல்வங்ளே! என்னிடம் வாருங்கள்.
எனக்கு சந்தேகமாக இருக்கிறது! இந்த குழந்தைகள் நம்முடையதுதானா?
குன்னுடையான் குழந்தைகளை கண்டதும் சந்தோசத்தடன் தன்னிடம் வரும் படி அழைத்தார். ஆனால்! தாமரைக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதை தீர்க்க விஷ்ணுவை அழைத்தாள்.
காஞ்சிநாதா! மகாவிஷ்ணுவே!


தாமரை அழைத்ததைக் கேட்ட விஷ்ணு தன் கருட வாகன மேறிப் புறப்பட்டு வந்தார்.
விஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ
செல்லாத்தா இந்த இரண்டு குழந்தைளையும் என் மகன்கள் என்று சொல்கிறாள். எனக்கு சந்தேகமாக இருக்கிறது. நான் எப்படி நம்புவது?
தாமரை! நீ சென்று முதலில் குளித்து விட்டு வா.
தாமரை பக்கத்தில் இருந்த குளத்திற்கு சென்று குளித்து விட்டு, விநாயகர் கோவிலுக்குச் சென்றாள். அங்கே விஷ்ணு “இந்த இரண்டு குழந்தைளும் தாமரையின் மகன்கள்” என்றால், அவள் மார்பில் இருந்து பால் சுரந்து இவர்களின் வாயில் விழ வேண்டும் என்று கூறினார்.



விஷ்ணு ஏழு திரைகளை உருவாக்கி, ஒரு பக்கம் தாமரையையும் மறுபக்கம் குழந்தைகளையும் நிற்க வைத்தார்.
அப்போது தாமரையின் மார்பில் இருந்து பால் பீரிட்டு பாய்ந்து, திரையின் மறுபக்கம் நின்ற குழந்தைகளின் வாயில் போய் விழுந்தது.


அத்தோடு தாமரையின் சந்தேகமும் தீர்ந்து....
என் செல்வங்களே! என்னிடம் ஓடி வாருங்கள்!
தாமரை உன் கணவனையும், குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பொன்னிவள நாடு சென்று உன் நிலங்களையும், செல்வங்களையும் திரும்பப் பெற்றுக் கொள்.
மூன்று மாதங்களின் பின், நான் வந்து உன் மகன்களுக்குப் பெயர் சூட்டுகிறேன்.
விஷ்ணு கூறிய படி அவர்கள் ஐந்து வருடங்களிற்குப் பிறகு பொன்னிவள நாட்டை நோக்கி புறப்பட்டனர்.




குன்னுடையானின் குடும்பம் காட்டு பாதையில் நடந்து சென்று கொண்டிருந்த போது, வழியில் பெரிய பன்றியும் அதன் குட்டியும் தூங்கிக் கொண்டிருந்ததை பார்க்கின்றனர்.
என்ன இது! வழியை மறைத்துக் கொண்டு தூங்குகிறதே?
கொர்ர்ர்ர் ...கொர்ர்ர்ர்...
இது காட்டுப் பன்றி! மிகவும் பலம் கொண்டது.
ஏய்! பன்றியே! எழுந்து அப்பால் செல்!
உஸ்ஸ்... இந்தப் பன்றி பல வருடங்களுக்கு முன் நம்மை சபித்து விட்டு, தவம் செய்து வரம் வாங்கப் போவதாக சொல்லி விட்டுச் சென்றது.
அது சொன்னபடியே செய்து வரமாக குட்டியும் பிறந்து விட்டது.
அத்தோடு, நீங்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும், அதன் குட்டி உங்கள் இருவரையும் அழிக்கும் என சபதமிட்டது.
கொர்ர்ர்ர் ...கொர்ர்ர்ர்...


அவர்களின் பேச்சுக் குரல் கேட்டு குட்டிப் பன்றி விழித்துக் கொண்டது.
கவலைப்படாதீர்கள் அம்மா! அந்தக் குட்டிப் பன்றியை நாங்கள் இப்பொழுதே கொன்று விடுகிறோம்.
கொர்ர்ர்ர்ர்
...கொர்ர்ர்ர்ர்...
அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்! நாம் முதலில் பொன்னிவள நாடுக்கு செல்ல வேண்டும்.



நீண்ட பயணம் செய்து, அவர்கள் பொன்னிவள நாட்டை அடைந்தனர். அங்கிருந்த விநாயகரை வணங்கிவிட்டு, வண்டுகள், பாதுகாக்கும் தங்களின் அரண்மனைக்குச் சென்றனர்.
ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்
ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்
பரந்தாமா! அரண்மனையை பாதுகாக்கும் வண்டுகளை திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள்.
எவ்வளவு காலத்துக்குப் பின் இங்கே வந்துள்ளோம்.
குன்னுடையான் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றார், அங்கே அரண்மனையின் காதில்லாத நாய் ஒரு குட்டியை ஈன்றெடுத்திருப்பதைப் பார்த்தார்.


இதற்குப் பொன்னாச்சி என்று பேர் வையுங்கள்.
அம்மா! இந்தக் காதில்லாத நாய்க் குட்டிக்கு என்ன பேர் வைக்கலாம்?
லொல்
நம் அரண்மனை மிகவும் அசுத்தமாக இருக்கிறது. ஊருக்குள் சென்று ஆட்களை கூட்டி வந்து சுத்தம் செய்ய வேண்டும்.



ஊருக்குள் சென்று ஆட்களை அழைத்து வந்து அரண்மனையை சுத்தம் செய்தனர்.


மீண்டும் குன்னுடையானின் ஆட்சியில் பொன்னிவள நாடு செழிப்படைந்தது.



சகோதரர்கள் இருவரும் அன்னையிடம் வந்தனர்.
அம்மா! நம் அரண்மனையில் குதிரைகள் இருக்கிறதா?
குதிரை சவாரி செய்ய ஆசையாக இருக்கிறது.
குழந்தைகளே! நம் அரண்மனையின் பின்புறம் உள்ள கொட்டாரத்தில் குதிரைகளும் அதன் குட்டிகளும் இருக்கின்றன. ஆனால்,
முதலில், நீங்கள் சென்று சாம்புகனை அழைத்து வாருங்கள். அவன் நம்மிடம் வேலை செய்யும் பெண்ணின் மகன். அவன் உங்கள் இருவரையும் நன்றாக பார்த்துக் கொள்வான்.
அம்மா! இதோ இப்பொழுதே சென்று அவனை கூட்டி வருகிறோம்.


இருவரும் சாம்புகனின் வீட்டை நோக்கி விரைவாக ஓடிச் சென்று அழைத்தனர்.
சாம்புகா! சாம்புகா!
யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?
எங்கள் தோட்டத்தில் உள்ள மாடுகளையும் குதிரைகளையும் பார்க்க வேண்டும்!
சரி என்னுடன் வாருங்கள்.


ம்மமா...
ம்மமா...
சாம்புகன் முதலில் இருவரையும் மாட்டுக் கொட்டாரத்திற்கு அழைத்துச் சென்றான். அவர்கள் அங்கிருந்த ஆடு மாடுகளையும் அதன் குட்டிகளையும் பார்த்து மகிழ்ந்தனர்.


அடுத்து, அவர்களை குதிரை கொட்டாரத்திற்கு அழைத்து சென்றான். அவர்களை பாரத்ததும் பயந்த குதிரைக்குட்டிகள் வெளியே ஓடத் தொடங்கின.
சாம்புகா! நாம் விரைந்து சென்று அந்த இரண்டு குதிரைக் குட்டிகளையும் பிடிக்கலாம்.
குதிரைக்குட்டிகள் வேலியைத் தாண்டிக்குதித்து, மலைகள் உள்ள பக்கமாக ஓடியது, சாம்புகன் அவைகளைப் பிடிக்க தொடர்ந்து ஓடினான்.



சாம்புகன் மின்னல் வேகத்தில் விரட்டிச் சென்று அந்த குதிரைக்குட்டிகளை பிடித்து, சகோதரர்கள் இருவரும் வரும் வரை காத்திருந்தான்.
சாம்புகன் குதிரைகளை சகோதரர்களிடம் கொடுத்து விட்டு, காட்டிற்கு சென்று இரண்டு பாம்புகளைப் பிடித்து அதன் தோலை உரித்து வந்து, அதை குதிரைக்கு கடிவாளமாக மாட்டினான்.
ஸ்ஸ்ஸ்......



சகோதர்கள் இருவரும் ஆனந்தமாக குதிரைகளில் சவாரி செய்தனர்.
குதிரைகள் மின்னல் வேகத்தில், பூமி அதிர பறந்து வந்தன. பூமி அதிர்வதை உணர்ந்த தாமரை வீட்டிலிருந்து வெளியே வந்து, மகன்கள் இருவரும் குதிரையில் வருவதைக் கண்டாள்.
நண்பா சாம்புகா! குதிரைகளைக் கொண்டு போய் லாயத்தில் கட்டிவை.


பரந்தாமா! மூன்று மாதங்கள் முடிவடைந்து விட்டது. நீங்கள் கூறிய படி மகன்களுக்கு பெயர் வைத்து அருள வேண்டும்!
இவ்வாறே மூன்று மாதங்கள் கடந்தது, தாமரை விஷ்ணுவை அழைத்தாள். அவரும் அங்கு தோன்றினார்.
நல்லதே நடக்கட்டும்!
மகா விஷ்ணுவே! மூன்று மாதங்கள் நிறைவடைந்து, என் மகன்களுக்கு பெயர் வைக்கும் வேளையும் வந்துவிட்டது.
ஆம் தாமரை! அக்கம் பக்கத்து ஊர் மக்கள் அனைவரையும் வரும் வெள்ளிக்கிழமை செல்லாத்தா கோவிலுக்கு வரச் சொல், நானும் வந்து விடுகிறேன். அப்போது வைத்துக் கொள்ளலாம்.


குன்னுடையான் சாம்புகனின் தந்தையை அழைத்து, பெயர் சூட்டும் விழாவிற்கு அனைவரையும் அழைக்கச் சொன்னார்.
சாமி! நான் என்ன செய்ய வேண்டும்.
டம் டம்
டம் டம்
ஆ...! என்ன சத்தம் அது?
மகா சனங்களே! வரும் வெள்ளிக்கிழமை குன்னுடையா ராஜா தன் மகன்களுக்கு பெயர் சூட்டும் விழாவினை செல்லாத்தா கோவிலில் நடத்த உள்ளார். அனைவரும் அவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
சேவகன் தண்டோரா அடித்து அனைவரையும் பெயர் சூட்டும் விழாவிற்கு அழைத்தான்.


விழாவிற்கு குன்னுடையான் குடும்பத்துடன் பல்லக்கினில் ஏறி வந்தார்.
அனைவரும் ஆற்றில் குளித்து விட்டு செல்லாத்தா கோவிலுக்குச் சென்றனர்.


அனைத்து மக்களும் கோவிலில் ஒன்று கூடியிருந்தனர். விழாவுக்கு வந்திருந்த விஷ்ணுவுக்கும், செல்லாத்தாலுக்கும் தமது வணக்கத்தை செலுத்தினர்.
அண்ணா! மூத்த மகனுக்கு என்ன பெயர் வைக்கலாம்?
தங்கம் போல் பிரகாசிக்கிறான். எனவே "பொன்னர்" என்று பெயரிட்டு மூன்று முறை கூறு.
சரி! இரண்டாவது மகனுக்கு என்ன பெயர் வைக்கலாம்.
அழகான பாலகன், வெண் சங்கை போல் மின்னுகிறான். அவனுக்கு "சங்கர்" என்று பெயரிட்டு மூன்று முறை கூறு.


காலங்கள் உருண்டோடி சென்றன. இருவரும் வளர்ந்து பலசாலியானார்கள்.
பொன்னரும், சங்கரும் இப்போது அழகான வாலிபர்களாக வளர்ந்து விட்டனர்.
சாம்புகனும் பெரிய வீரனாக வளர்ந்து விட்டான்.
தங்காள் பேரழகுப் பெண்ணாக வளர்ந்து நின்றாள்.



கோவிலும், அரண்மனையும் புனருத்தாரம் செய்யப்பட்டு புது பொலிவை பெற்றன. பொன்னிவள நாடு பசுமையுடன், செல்வ செழிப்புடனும் சிறந்து விளங்கியது.







சகோதரர்கள் தினமும் வேட்டைக்குச் சென்று விட்டு அரண்மனைக்கு திரும்பியதும், அவர்களுக்குப் பிடித்த தாய விளையாட்டை விளையாடுவார்கள்.




அவர்களின் வரவுக்காக தங்கை தங்காள் காத்திருந்தாள்.
எங்கள் ஆயுதங்களை எடுத்துச் சென்று கூர் தீட்டிக் கொண்டு வா!
சரி சாமி!
அண்ணா! களைத்துப் போய் இருப்பீர்கள், இந்த குளிர்ந்த தண்ணீரை அருந்துங்கள்!


வழக்கம் போல் சகோதரர்கள் தாயம் விளையாடிக் கொண்டிருந்த போது, தாமரை அன்னை அழைப்பதாக கூறி அவர்களை அழைத்துச் சென்றாள். தாயின் அறையில் அனைவரும் முக்கியமான விஷயம் ஒன்றை பேச கூடியிருந்தனர்.
செல்வங்களே! உங்கள் தந்தைக்கும் எனக்கும் வயதாகிவிட்டது!
உங்களுக்கு ஒரு திருமணத்தை நடத்தி வைப்பது பற்றி பேச வேண்டும்.
அதற்காகத்தான் அழைத்தேன்!




தாமரை மகன்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் அழத் தொடங்கினாள்.


தாமரை மனமொடிந்து போனாள். அவள் சாப்பிடவும் இல்லை; துாங்கவும் இல்லை.
எப்பொழுது என் மகன்களின் கழுத்தில் மணமாலையை நான் பார்ப்பேன்?
சகோதரர்கள் இருவரும் பென்னிவள நாட்டை ஆள தயாராகி விட்டனர். நாட்டுக்கு சிறந்த அரசர்கள் கிடைத்து விட்டனர். ஆனால்! திருமணம் செய்ய அவர்கள் மறுத்து விட்டது தாமரைக்கு மிகுந்த மனவருத்தத்தை தந்ததுள்ளது. ஒருவேளை! அவர்களுக்கு திருமணம் நடக்க வில்லையென்றால், எவ்வாறு அக் குடும்பத்தால் நீண்ட காலங்கள் பரம்பரையாக ஆட்சி செய்ய முடியும்?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic16tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!








01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியின் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது


## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

ISBN 978-1-927093-57-3

90000 >

9 781927 093573

© 2012 Ponnivala Publishing